# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். 194/ந/2018

நாள் : 22/11/2018

31.08.2018 நாளிட்ட
தினமலர் நாளிதழ் செய்தி – முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது.

நகராட்சி ஆணையர்,
பல்லவபுரம் நகராட்சி,
சென்னை – 44. – எதிர் மனுதாரர்

சென்னை, பல்லவபுரம் நகராட்சி குறித்து 31.08.2018 நாளிட்ட தினமலர் நாளிதழில் “புரோக்கர்கள் பிடியில் சிக்கிய பல்லாவரம் நகராட்சி நிர்வாகம் ” என்ற தலைப்பில் செய்தி வெளியாகி இருந்தது. மேற்குறிப்பிட்ட செய்தியினை 194/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்து, பல்லவபுரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் விசாரணையின்போது ஆணையர் அளித்த வாக்குமூலம் ஆகியன பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை, பல்லவபுரம் நகராட்சி குறித்து “புரோக்கர்கள் பிடியில் சிக்கிய பல்லாவரம் நகராட்சி நிர்வாகம் ” என்று தினமலர் நாளிதழில் 31.08.2018 அன்று வெளியான செய்தி குறித்து நகராட்சி ஆணையாளரின் 27.09.2018 நாளிட்ட அறிக்கை பெறப்பட்டது. அவ்வறிக்கையில், பல்லவபுரம் நகராட்சியில் பொதுமக்களுக்கு நகராட்சி மூலம் அனுமதி வழங்கப்படும் சொத்துவரி, குடிநீர் இணைப்பு மற்றும் பாதாள சாக்கடை இணைப்புகள் அனைத்தும் பொதுமக்களிடமிருந்து முறையாக நிர்ணயம் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மூலம் பெறப்பட்டு, நகராட்சி அலுவலர்களால் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் கள ஆய்வு செய்து அனுமதி வழங்கப்பட்டு வருகின்றன என்று நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும், மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய சேவைப்பணிகள் அனைத்தும் காலதாமதமின்றி உடனுக்குடன் வழங்கப்பட்டு வருவதாகவும் சம்பந்தப்படாத வெளிநபர்கள் அலுவலகப் பணிகள் சம்பந்தமாக தொடர்பு கொள்வது கிடையாது என்றும், நகராட்சி அலுவலகத்தில் கட்டணமில்லா தொலைபேசி மூலம் அன்றாடம் புகார்கள் பெறப்பட்டு உடனுக்குடன் சரிசெய்யப்பட்டு வருகின்றன என்றும் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

2. பல்லவபுரம் நகராட்சி ஆணையர் பொறுப்பினை வகிக்கும் நகராட்சிப் பொறியாளரிடம் 13.11.2018 அன்று இது சம்பந்தமாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு விளக்கமும் பெறப்பட்டது. நாளிதழில் வெளியான செய்தியை மறுத்ததுடன், அலுவலக வாயிலில் மினி அலுவலகம் அமைத்து நகராட்சி அலுவலகத்திற்கு வருவோர் போவோரை கண்காணிக்கும் நபர்கள் யாரும் இல்லை என்று விசாரணையின் போது தெரிவித்தார். தனது அறிக்கையில் தெரிவித்த விவரங்களை உறுதி செய்ததுடன், பல்லவபுரம் நகராட்சி அலுவலகத்தில் வட்டாட்சியர் அலுவலகமும் செயல்படுவதால் இரண்டு அலுவலகங்களுக்கும் பொதுமக்கள் வந்து செல்கின்றனர் என்றும் தெரிவித்தார். மேலும், இவ்வலுவலகம் வந்து செல்லும் பத்திரிக்கை நிருபர்கள், குறைபாடுகள் குறித்து ஏதேனும் தெரிவித்தால் அவைகளும் உடனுக்குடன் நிவர்த்தி செய்யப்படுகிறது என்று ஆணையர் பொறுப்பினை வகிக்கும் நகராட்சிப் பொறியாளர் தெரிவித்தார்.

3. இந்நேர்வில், பல்லவபுரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை பரிசீலிக்கப்பட்டன. இந்நிலையில், பல்லவபுரம் நகராட்சி அலுவலக வளாகத்தில் இடைத்தரகர்களால் ஆன மினி அலுவலகம் செயல்படுகின்றதா என்பதை அப்போதைக்கப்போது கண்காணிப்புடன், நகராட்சியில் பணி புரியும் அலுவலர்கள் இடைத்தரகர்களின் செயல்பாட்டிற்கு உட்படாமல் செயல்படுகிறார்களா என்பதையும் உறுதி செய்து கொள்வதுடன் இது சம்பந்தமாக அலுவலர்களுக்கு சுற்றறிக்கை மூலமாக உரிய அறிவுரையும் வழங்கும்படி நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறுது.

2018– ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள், 22–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்

1. நகராட்சி ஆணையர்,
பல்லவபுரம் நகராட்சி,
சென்னை – 600 044.

2. மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்,
செங்கல்பட்டு மண்டலம்,
தாம்பரம், சென்னை – 600 045.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்